செய்தி வெளியீடு எண்–14 நாள்–4.1.2008

## <u>தமிழகத்தில் விதை மற்றும் உரத்தட்டுப்பாடு ஏதும் இல்லை</u>

## <u>வேளாண்மை இயக்குநர் அறிவிப்பு</u>

**உரம்:**

வேளாண்மை சாகுபடிக்கு ஜனவரி மாதத்திற்கு 33,750 மெ.டன் டி.ஏ.பி உரம் தேவைப்படுகிறது. 3.1..2008 அன்று புதுடில்லியில் நடைபெற்ற உரம் தொடர்பான ஆய்வுக்கூட்டத்தில் ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதத்திற்கு தமிழகத்திற்கு தேவைப்படும் ‘‘டி.ஏ.பி.‘‘ உரங்களை ஒதுக்கீடு செய்ய கேட்டுக் கொள்ளப்பட்டது. அதன் அடிப்படையில் மத்திய அரசு ஸ்பிக் நிறுவனம் மூலம் 6,000 மெட்ரிக் டன்னும், இப்கோ நிறுவனம் மூலம் 10,000 மெட்ரிக் டன்னும், எம்.சி.எப்.லிட் மூலம் 4,410 மெட்ரிக் டன்னும், இந்தியன் பொட்டாஷ் நிறுவனம் மூலம் 13,000 மெட்ரிக் டன்னும், குஜராத் ஸ்டேட் பெர்டிலைசர் அண்டு கெமிக்கல்ஸ் லிமிடெட் மூலம் 8,500 மெட்ரிக் டன்னும், பரோடா இன்டால் அண்டு கோ நிறுவனம் மூலம் 2,500 மெட்ரிக் டன்னும் ஆக மொத்தம் 44,410 மெட்ரிடன் டி.ஏ.பி உரங்களை தமிழகத்திற்கு விநியோகம் செய்திட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்தியன் பொட்டாஷ் நிறுவனம் அளிக்க வேண்டிய 13,000 மெ.டன்கள் தூத்துக்குடி துறைமுகத்தில் இருப்பில் உள்ளது.

ஜனவரி மாதத்திற்கு தேவைப்படும் 82,500 மெ.டன் யூரியாவில், 61,900 மெட்ரிக் டன்னும் ஜனவரி மாதத்திற்கு தேவைப்படும் 39,000 மெ.டன் பொட்டாஷில் 14,063 மெட்ரிக் டன்னும் இருப்பில் உள்ளது. மேலும் இம்மாதத்தில் 97,353 மெ.டன் யூரியாவும், 58,304 மெ.டன் பொட்டாஷும், உற்பத்தியாளர் மற்றும் இறக்குமதியாளர்களால் மாவட்டங்களுக்கு விநியோகம் செய்திட அந்நிறுவனங்கள் இசைவளித்துள்ளன.

காம்ப்ளெக்ஸ் 20:20:0 உரமானது, தமிழகத்தில் மதுரை, தேனி, திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, கடலூர், விழுப்புரம் மற்றும் வேலூர் மாவட்டங்களில் அம்மாவட்டத்தில் உள்ள மண்ணின் தன்மைக்கு ஏற்ப அதிகமாக பயன்படுத்தப்படுகிறது. இம்மாவட்டங்களுக்கு தேவைப்படும் 8000 மெட்ரிக் டன் 20:20:0 காம்ளெக்ஸ் உரத்தை பாக்ட் நிறுவனம் இம்மாதத்திற்குள் விநியோகம் செய்வதாக உறுதியளித்துள்ளது.

மாநிலத்தில் அனைத்துப் பகுதிகளிலும் நெல், வாழை, கரும்பு மற்றும் தோட்டக்கலை பயிர்களுக்கு டி.ஏ.பி. உரம் அடி உரமாக பயன்படுத்தப்படுகிறது. இதற்கு மேலும் காம்ப்ளெக்ஸ் உரம் தேவைப்பட்டால் மத்திய அரசு மூலம் இறக்குமதி செய்யப்படும் மானோ அம்மோனியம் பாஸ்ப்பேட் (11:52:0) உரம் மூலம் ஈடுகட்டப்படுகிறது. இந்த உரம் விவசாயிகளின் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றுள்ளது.

தேவையான அளவு டி.ஏ.பி மற்றும் காம்ப்ளெக்ஸ் உரங்கள் கூட்டுறவு சங்கங்கள் மூலம் விநியோகம் செய்யப்படுவதால் தனியார் உர விற்பனையாளர்களால் உர தட்டுப்பாடு உள்ளதைப் போன்று தவறான தகவல் பரப்பப்பட்டு வருகிறது.

**நெல் விதை:**

நவரைப்பட்ட நெல் சாகுபடியை பொருத்தமட்டில் இதுவரை 4,001 மெ.டன் தரமான சான்று நெல் விதைகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. மேலும் குறுகிய கால இரகங்களான ஆடுதுறை 43, 45 மற்றும் 36 ஆகிய 4,799 மெட்ரிக் டன் நெல் விதைகள் வேளாண்மைத் துறை மற்றும் அரசு அங்கீகாரம் பெற்ற தனியார் நெல் விதை விற்பனையார்கள் மூலமாக இருப்பு வைத்து விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

எனவே, விதை நெல் மற்றும் உரங்கள் தட்டுப்பாடு என்ற உண்மைக்கு மாறாக தவறான செய்திகளை வெளியிட்டு விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்த வேண்டாம். அதிக விலை கொடுத்து விற்பனை மையங்களில் வாங்க வேண்டிய அவசியமில்லை எனவும் தெரிவித்துக் கொள்வதுடன், அதிக விலைக்கு உரங்கள் மற்றும் விதைகள் விற்பனை செய்யும் நிறுவனங்கள் மீது இத்துறையின் மூலம் கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தேவையான உரங்கள் கூட்டுறவு சங்கங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறது. அங்கு தேவையான விவசாயிகள் உரங்களை பெற்றுக் கொள்ளலாம்.

வெளியீடு– இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.